# ரத்தக் கசிவே ஏற்படாமல் இதய அறுவை சிகிச்சை

## மியாட் மருத்துவர்கள் சாதனை

**சென்னை**

ரத்தம் உரையாத குறைபாடு (ஹீமோபீலியா) கொண்ட நோயாளியின் இதய ரத்தக் குழாய் வீக்கப் பிரச்சினையை சரிப்படுத்த ரத்தக் கசிவே ஏற்படாத முறையில் அறுவை சிகிச்சை செய்து சென்னை மியாட் மருத்துவமனை மருத்துவர்கள் குழு வெற்றியடைந்துள்ளது.

கேரளத்தைச் சேர்ந்த பினு நெட்டிகார்டன்(38) சிறு வயது முதலே ஹீமோபீலியா என்ற குறைபாட்டால் பாதிக்கப்பட்டு வந்தார். அவருக்கு உடலில் சிறு காயம் ஏற்பட்டால் கூட அதிகளவு ரத்தக் கசிவு ஏற்படும். இந்நிலையில் அவருக்கு இதயத்தில் உள்ள ரத்தக் குழாயில் வீக்கம் ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. சென்னை ராமாபுரத்தில் அமைந்துள்ள மியாட் மருத்துவமனையில் கடந்த மாதம் 23-ம் தேதி அவருக்கு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இது குறித்து தலைமை மருத்துவர் வி.வி.பாஷி செய்தியாளர்கள் சந்திப்பில் பேசும்போது, "சுமார் 7 மணி நேரம் சிகிச்சை நடைபெற்றது. செயற்கை ரத்தக் குழாய் நோயாளிக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம். எனவே, அவருடைய ரத்தக் குழாயே சரி செய்யப்பட்டுள்ளது. சிகிச்சையின் போது ரத்தக் கசிவு ஏற்படாமல் கவனமாக தையல்கள் போட்டுள்ளோம்" என்றார்.




▲ சென்னை மியாட் மருத்துவமனையில் நவீன முறையில், ரத்தக் கசிவே ஏற்படாமல் இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பினு நெட்டிகார்டனுடன் மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன் தாஸ் மற்றும் தலைமை மருத்துவர் வி.வி.பாஷி. படம்: எம்.வேதன்

ஹீமோபீலியா குறைபாடு ரத்தத்தின் உட்கூறுகளில் ஏற்படும் மரபு வழியான குறைபாடுகளால் ஏற்படுவதாகும். இது பரம்பரை நோயாக பெரும்பாலும் ஆண்களுக்கு வரக்கூடியது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச மருந்துகள் கொடுத்து உதவும் எல்.ஏ.கம்யூனிகேஷன்ஸ்-ப்ராஜெக்ட் ஷேர் அமைப்பின் சார்பில் உஷா பார்த்தசாரதி பேசும்போது, "இந்த குறைபாடுக்கு முழுமையான தீர்வு இல்லை. குழந்தைப் பருவத்தில் உடம்பில் தெரியும் நீலப் பட்டைகள் மூலம் ரத்த கசிவு ஏற்படுவதை தெரிந்து கொள்ளலாம். இந்தியாவில் சுமார் 18 ஆயிரம் பேர் இந்த குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் 1,800 பேருக்கும் அதிகமாக உள்ளனர். பினு நெட்டிகார்டனுக்கு ரூ.10 லட்சம் மதிப்புள்ள மருந்துகளை இலவசமாக கொடுத்துள்ளோம்" என்றார்.

இது பற்றி மருத்துவர் செழியன் சுபாஷ் கூறும்போது, "இந்தியாவில் ஏராளமானவர்களுக்கு இந்தப் பிரச்சினை இருந்தாலும் செலவு காரணமாக உரிய சிகிச்சைகளை எடுத்துக்கொள்ள முடிவதில்லை. ஒரு நோயாளி வழக்கமான சிகிச்சை பெற மாதத்துக்கு சுமார் ரூ.60 ஆயிரம் செலவாகும். பன்னாட்டு நிறுவனங்களே இந்த மருந்து தயாரிப்பில் ஈடுபடுகின்றன. உள்நாட்டில் தயாரித்தால் அதன் விலை குறையலாம்" என்றார்.

மியாட் மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன் தாஸ், தலைவர் மல்லிகா மோகன் தாஸ் ஆகியோர் இந்த சந்திப்பின் போது உடனிருந்தனர்.